யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016
FWC

| தரம் :- 13 (2016) | கர்நாடக சங்கீதம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

01) i) தாள தசப்பிராணங்களுள் பின்வருவன எவற்றை குறிக்கின்றன என்பதைக் குறிப்பிடுக.

அ) தாளத்தின் அங்கங்களைக் கைச்செய்கையினால் காட்டுவது

ஆ) தாளத்தில் பாட்டு ஆரம்பிக்கும் இடம்

இ) பாட்டின் காலப் பிரமாணத்தைக் குறிப்பது

ஈ) லகுவின் ஐந்து வகை

உ) ஷடங்கங்களில் தனி நேர அளவை அறிவதற்கு உதவுவது

ii) மேற்குறிப்பிட்ட தாளதசப்பிராணங்களுள் இரண்டினை விளக்குக. (20 புள்ளிகள்)

02) i) பாலுஸ்வாமி தீட்சிதரினால் கர்நாடக இசைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நரம்புக் கருவி யாது?

ii) இவ்வாத்தியத்தின் தந்திகள் சுருதி கூட்டப்படும் முறையைக் குறிப்பிடுக.

iii) இவ்வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்கள் இருவரைக் குறிப்பிடுக.

iv) இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

v) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக. (20 புள்ளிகள்)

03) i) சப்த தாளங்கள் 35 தாளங்களாக உருவாகும் முறையை விளக்கி உதாரணம் தருக.

ii) 35 தாளங்கள் 175 தாளங்களாகிய முறையை விளக்கி உதாரணம் தருக.

## பகுதி - II

04) பின்வரும் இராகங்களுள் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாக எழுதுக.
(உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்)

i) ஜன்னிய சம்பூர்ண இராகம்

ii) ஹமிர் கல்யாணி

iii) ஹிந்துஸ்தான் பெஹாக்

iv) ஆபோகி (20 புள்ளிகள்)

05) i) பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான உருப்படியினை / இசை வடிவத்தினைக் குறிப்பிடுக.

அ) சுத்தாங்கமாக பாடப்படும் உருப்படி

ஆ) இராகத்தின் இலட்சணத்தைக் கூறும் உருப்படி

இ) 15ம் நூற்றாண்டில் அருளப்பட்ட சந்தங்களை அடிப்படையாகக் கொண்ட பாடல்வகை

ஈ) ஒரு நிகழ்ச்சியோ / பழங்கதையோ அழகாக விபரிக்கும் உருப்படி

ii) மேலே தரப்பட்ட உருப்படிகளுள் ஒன்றினைப் பற்றி விரிவாக எழுதுக. (20 புள்ளிகள்)

06) கர்நாடக இசைக்கும் ஹிந்துஸ்தானி இசைக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளைத் தருக.
(20 புள்ளிகள்)

07) i) மேலைத்தேய லிபிமுறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

ii) மேலைத்தேய இசையில் சப்த ஸ்வரங்களுக்கு வழங்கப்படும் பெயர்களைக் குறிப்பிடுக.

iii) மேலைத்தேய இசையில் 12 ஸ்வரதானங்களுக்கு வழங்கும் பெயர்களைக் குறிப்பிடுக.

iv) பின்வரும் இராகங்களின் ஆரோகண அவரோகணங்களை மேலைத்தேய லிபிமுறையில் எழுதுக.

அ) மோகனம்

ஆ) ஹரிகாம்போதி

(20 புள்ளிகள்)

08) ''காலைத்தூக்கி நின்றாடும் தெய்வமே'' எனத் தொடங்கும் பாடலை இயற்றியவரின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைப் பணியையும் தருக.
(20 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education